**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24–ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.4–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(வாதி ஆஜர் இல்லை. 5ம் பிரதிவாதி ஆஜர். 2 முதல் 4 , 6 முதல் 9, 14 முதல் 17 மற்றும் 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி வழக்கறிஞர் ஆஜர்மற்றும் 2,3,4,5 முதல் 9,14,16 முதல் 20 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண். 932/2015

பி.வா.சா.4 தினேஷ்குமார் த/பெ சண்முகம்

**<u>3,4,20 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை :–</u>**

1. இந்த வழக்கை செய்த வாதி நவீனா என் சகோதரி என்றால் சரிதான். 2ம் பிரதிவாதியான சிவசண்முகம், எனக்கும், வாதிக்கும் தந்தை என்றால் சரிதான். 3,4 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியின் சகோதர் என்றால் சரிதான். நான், வாதி மற்றும் என் தாயார் சிவகாமி ஆகியோர் ஒரே வீட்டில்தான் வழக்கிற்க்கு முன்பு வசித்து வந்தோம் என்றால் சரிதான்.

2. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்வதற்க்கு முன்பு என்னிடம் பாகப்பிரிவினை கேட்டார்கள் என்றால் சரிதான். அதற்பிறகு எனக்கும், வாதிக்கும் மனம் வறுத்தம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் ஏன் வாதிவுடன் சேர்ந்து வழக்கு தாக்கல் செய்யாதற்க்கு என்ன காரணம் என்றால் என் தங்கை வாதி என்னிடம் கேட்காமல் வழக்கு தாக்கல் செய்துவிட்டார்.

3,4,20 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.